# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 523/2007

Deposition of witness for: PW - 10

Name : பாலாஜி Father/Husband Name: ராஜசேகரன்

Village : Taluk :

Calling : Age :

Date : 23.06.2025

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.06.2025.

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது )

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் மதுரை மாவட்டம் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து கடந்த 2022ம் ஆண்டு கட்டாய ஓய்வு பெற்று மதுரையில் குடியிருந்து வருகிறேன். 24.07.2007ம் தேதி மதுரை மாவட்டம் மேலூர் வட்ட ஆய்வாளராக பணிபுரிந்தபோது நிலைய குற்ற எண் 507/07 வழக்கினை எனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு வழக்கின் சம்பவ இட சாட்சிகளான வாசுதேவன், பாண்டியன், ரமேஷ், மோசஸ், மூர்த்தி, ஆகியோர்களை மேல்விசாரணை செய்து சார்பு ஆய்வாளரிடம் கூறியதைபோல் என்னிடமும் சொன்னதால் நான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. வழக்கின் பார்வை மகஜர் மற்றும் மாதிரிவரைபடம் நான் சம்பவ இடத்தை பார்வையிட்ட போது சார்பு ஆய்வாளர் தயார் செய்ததுபோல் இருந்ததால் நான் தனியாக தயார் செய்யவில்லை. அன்றையதினம் அதிகாலை 05.30 மணிக்கு ரகசிய தகவலின்பேரில் வெள்ளரிபட்டி பஸ் ஸ்டாப்பில் வைத்து எங்கள் போலீஸ் பார்ட்டியை பார்த்து ஓடிய எதிரிகள் பின்னால் பெயர், விலாசம் கேட்டு தெரிந்த சாஸ்திரி,

மணிமாறன், பெரியசாமி, கண்ணன், முருகன் ஆகியோர்களை பிடித்து சாட்சிகள் கண்ணன் மற்றும் பாண்டி முன்னிலையில் எவ்வித வற்புறுத்தலும் இல்லாமல் 3ம் எதிரி சாஸ்திரி தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். ( **3ம் எதிரி சாஸ்திரி ஒப்புதல் வாக்குமூலம் அசாஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது** ). அதில் அழைத்து சென்றால் நாங்கள் திருடிச்சென்ற அலுமனிய கம்பி, பித்தளை மவுத்களை ஒத்தக்கடை பகுதியை சேர்ந்த கல்யாண சுந்தரத்தை அடையாளம் காட்டி களவாடிய சொத்துக்களை எடுத்துதருவதாக கூறினார். மற்ற எதிரிகளான மணிமாறன், பெரியசாமி, கண்ணன், முருகன் ஆகியோர்களை தனி தனியாக குற்ற வாக்குமூலம் பெற்று அதில் கையொப்பம் பெற்றுள்ளேன். 3வது எதிரி சாஸ்திரி அடையாளம் காட்டிய கல்யாணசுந்தரத்தை கைது செய்து அவரை எவ்வித வற்புறுத்தல் இல்லாமல் ஒப்புதல் வாக்குமூலம் பெற்று அதில் கையொப்பம் பெற்று பதிவு செய்துள்ளேன். எதிரிகள் மணிமாறன், பெரியசாமி, கண்ணன், முருகன், ஆகியோர்களை விசாரித்து தனி வாக்குமூலம் பதிவு செய்தேன். அதில் அனுமதிக்கப்பட்ட பகுதியான கல்யாணசுந்தரத்தை மற்ற எதிரிகள் அடையாளம் காட்ட 09.30 மணிக்கு கைது செய்து அவரிடம் விசாரித்தபோது தான் வாங்கிய களவாடப்பட்ட பொருட்களை ஏலத்திற்கு எடுத்ததாக கூறி மதுரை 6, லெட்சுமிபுரம் 5வது தெருவில் கோபி என்பவரிடம் கொடுத்து வைத்ததாக கூறி 10.45 மணிக்கு லெட்சுமிபுரம் 5வது தெரு சென்று கோபியை கடையில் வைத்து எதிரி கல்யாணசுந்தரம் அடையாளம் காட்ட உருக்கிய பைப் வடிவம் உள்ள பித்தளைக்கட்டி ஒன்று, உருக்கிய சிறிய பித்தளை கட்டி 15, எடை சுமார் 200 கிலோ உள்ள 16 கட்டிகளை அதே சாட்சிகள் முன்னிலையில் கல்யாணசுந்தரம் அடையாளம் காட்ட கோபி ஆஜர் செய்த வழக்கு சொத்துக்களை

அத்தாட்சியில் கைப்பற்றினேன். ( **அந்த அத்தாட்சி அசாஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது** ). கைப்பற்றபட்ட வழக்கு சொத்துக்கள் மற்றும் எதிரிகளுடன் நிலையம் வந்து பாரா வசம் ஒப்படைத்து தக்க வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன். வழக்கு சொத்துக்களை படிவம் 95 மூலம் நீதிமன்ற வசம் ஒப்படைத்தேன். ( **அந்த படிவம் 95 அசாஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது** ). சாட்சிகள் கண்ணன், பாண்டி, கோபி ஆகியோர்களை தனி தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். கைப்பற்றிய பித்தளை கட்டிகளை TVS Sri chakra குவாலிட்டி அஸ்சுரன்ஸ் நிறுவனத்து பொது மேலாளர் வைரமுத்து என்பவரை விசாரித்து அறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். அநத் அறிக்கை ஏற்கனவே அசாஆ 5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. சார்பு ஆய்வாளர் பாண்டி என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். இத்துடன் எனது புலன்விசாரணை முடித்து 18.12.2007 ம் தேதி எதிரி சுரேஷ், கார்த்திக், சாஸ்திரி, மணிமாறன், பெரியசாமி, கண்ணன், முருகன் ஆகியோர்கள் மீது பிரிவு 379 இதச வாகவும், 8 வது எதிரி கல்யாணசுந்தரத்திற்கு பிரிவு 414 இதச ஆகவும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**( எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்யவில்லை. இத்துடன் குறுக்குவிசாரணை முடித்து வைக்கப்படுகிறது** ).